[1994 ஜனவரி 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முன்னரே அறிவித்தவாறு வினா எண் 170 தற்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது. வினா எண் 170, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

170--

செங்கம் தொகுதி இறையூர் ஏரியிலிருந்து சி. தெங்கம்பட்டுவரை கால்வாய் வெட்டும் திட்டம்.

*19962-**டாக்டர் பெ. வீரபாண்டியன் :**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதி, இறையூர் ஏரியில் இருந்து சி. தெங்கம்பட்டு வரை சுமார் 11 கி.மீ. தூரம் கால்வாய் வெட்ட வனப் பகுதியில் அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ):

செங்கம் இறையூர் ஏரியில் இருந்து சி. தெங்கம்பட்டு வரை கால்வாய் வெட்டுவதற்கு வனப்பகுதியில் அனுமதி அளிப்பதற்கான செய்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுப்பாளையம் ஒன்றியத்தில் இறையூர் ஏரிக்கு செய்யார் ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. ஏரி நிரம்பியவுடன் அது கோடி வழியாக மீண்டும் செய்யார் ஆற்றுக்கு சென்று விடுகிறது. இறையூர் ஏரி, சித்தேரி, அதுமட்டுமல்ல மேலப்புஞ்சை, சேந்தமங்கலம், வடமாத்தூர், நத்தவாடி, கங்கம்பட்டு ஆகிய ஏரிகளும் நிரம்பி கிட்டத்தட்ட 1,500 ஏக்கர் நிலம் பாசன வசதி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதில் பிரச்சினை என்னவென்றால் இறையூருக்கும் மேலப்புஞ்சைக்கும் மத்தியில் 3 கிலோ மீட்டர் தூரம் தரைக்காடு இருக்கிறது. அதற்கு அனுமதி அளித்து அங்கே ஏரிக்கால்வாய் வெட்டிக்கொள்ள அனுமதிதந்தால் கிட்டத்தட்ட 8 ஏரிகள் நிரம்பி பாசன வசதிக்கு பயன்படும் என்பதால் தயவுசெய்து மீண்டும் அதை பரிசீலனைச் செய்வார்களா? அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரிக்கு தண்ணீர் விடுவது என்பது இது வனத்துறை சம்பந்தப்பட்டப் பணியல்ல. இது சம்பந்தப்பட்ட துறை இதுகாறும் வனத்துறைக்கு எந்தவிதமான அனுமதியும் கோரவில்லை. எனவே, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இயலாது என்ற பதிலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஜனவரி 5]

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை இந்த மன்றத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு மேலப்புஞ்சைக்கும் இறையூருக்கும் மத்தியில் உள்ள 3 கிலோ மீட்டர் தூரம் வனத்துறைக்குச் சம்பந்தப்பட்டது என்றும் வனத்துறை அதற்கு அனுமதி அளித்தால் நான் நிச்சயமாக ஏரிக்கால்வாய் அமைத்துத்தர முடியும் என்றும் தெரிவித்தார்கள். எனவே தான் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன், கங்கம்பட்டி ஏரி நிரம்புவது மட்டும் அல்ல, கங்கம்பட்டி ஏரி நிரம்பியவுடன் ஜம்பேரி, மஷார், களரபாடி, காளாம்பாடி, ஊதலாம்பூண்டி, தேவனாம்பட்டு, நார்த்தாம்பூண்டி, வில்லூர் ஆகிய கிட்டத்தட்ட 15 ஏரிகள் நிரம்பி 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புகள் பாசன வசதி கிடைக்கும். எனவே, மீண்டும் ஒரு முறை கேட்க விரும்புவது, இறையூர் ஏரியிலிருந்து மேலப்புஞ்சை ஏரிக்கு இடைப்பட்ட 3 கிலோ, மீட்டர்தூரம் வனப்பகுதியில் இருக்கிறது. அதற்கு தயவுசெய்து தாங்கள் அனுமதி அளித்தால் அங்கே பொதுப்பணித்துறையின் மூலம் ஏரிக் கால்வாய் அமைத்துத்தர வாய்ப்பு இருக்கிறது. எனவே, மீண்டும் பரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற தகவல் சரியாக இருக்குமானால் இது குறித்து மாண்புமிகு உறுப்பினருக்கு உரிய பதில் அளிக்கப்படும். துறைத் தந்திருக்கிற பதிலினுடைய அடிப்படையில் இதுகாறும் வேறு எந்தத் துறையும் அனுமதி கோரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. வனத்துறையைப் பொறுத்தவரையில் வனத்தைப் பாதுகாக்கிற, மேம்பாடு செய்கிற திட்டமாக இருக்குமானால் மட்டுமே வனத்துறை தானாக அனுமதி அளிக்கமுடியும். வனம் சாராத பணிகளாக இருக்குமானால் மத்திய அரசினுடைய அனுமதியை கோர வேண்டிய நிலை இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன. அவைகளோடு தொடர்புகொண்டு மட்டுமே செய்யமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையில் கூட இந்த நாட்டினுடைய சம நீதிக்காகப் போராடிய டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்புவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டினுடைய தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மணி மண்டபம் கட்டுவதற்காக அனுமதி வழங்கி அது சம்பந்தமாக மணி மண்டபம் கட்டப்படுகின்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைப்பற்றி அண்மையிலே பத்திரிகைகளிலேகூட குறிப்பிட்ட செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. அந்தப் பகுதி வனத்துறை சம்பந்தப்பட்ட பகுதி என்றுகூட பல்வேறு கோணத்திலே எழுதப்பட்டு இருக்கின்றது. ஆனால், உண்மையிலே அது வனத்துறை சம்பந்தப்பட்ட பகுதியல்ல. எனவே,

வனத்துறைக்கு அந்தப் பகுதியிலே எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. அது ரெவின்யூ மற்றும் சென்னை மாநகரத்தைச் சார்ந்த பகுதி. அந்தப் பகுதி வனத்துறைக்குச் சம்பந்தப்பட்ட பகுதி அல்ல. வனத்துறைக்குக் கட்டுப்பட்ட பகுதியும் அல்ல. எனவேதான் அங்கே அம்பேத்காருடைய மணிமண்டபம் எழுப்பப்படுகிறது. எனவே, வனத்தைப் பொறுத்தவரையில் வனத்துறை சம்பந்தப்பட்ட பகுதியாக இருந்தால் அதற்குரிய அனுமதியை மைய அரசிடமிருந்தும் மைய அரசு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் கோரவேண்டும். அதையும் செய்து, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வைப் போற்றி, அதற்குரிய தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

163--

குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி

19159*–திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், நிதியுதவியை அதிகப்படுத்தி வழங்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) குடும்ப அட்டைகள் மூலம் ரூபாய் இரண்டரை மற்றும் மூன்றரை ரூபாய்க்கு வழங்கப்படும் அரிசிக்கு மாநில அரசுக்கு ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசு நிதியுதவி எதுவும் வழங்குவது இல்லை.

(ஆ) வினா எழாது.

164--

சென்னை நகரில் குடிநீர்க் குழாய்களில், கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம்.

15050*–திரு. கே. ஏ. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை நகரில் பல இடங்களில் கழிவுநீர் குடிநீர்க் குழாய்களில் கலந்து விடுவதால் காலரா, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் பரவுவதை அரசு அறியுமா?